# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஜூன் 03, 2017 Weekly E-paper ● June 03, 2017


# பேசு தலைவா பேசு!

சுப. வீரபாண்டியன்



நீ என்றன் பள்ளிக்கூடம்
சிந்தை தெளியாப் பருவத்துச்
சிறுவனாய்ப் படித்தேன் உன்னை
உயர்கல்வித் தளத்தில் கூட
உன்னைத்தான் படித்தேன்
அப்போதே எனது
திசைகளைத் தீர்மானித்த
தொலைதூர வெளிச்சம் நீ
தொடமுடியா விண்மீன் நீ!

நீ என்றன் பள்ளிக்கூடம்
இலக்கியம் எப்படி எழுதுவதென்றும்
மேடையில் எப்படிப் பேசுவதென்றும்
வாதம் புரியும் வகைஎது என்றும்
வடிவாய் உன்னிடம் பாடம் கற்றேன்

நீ என்றன் பள்ளிக்கூடம்
பத்து ஆண்டுகள் உன்
பக்கம் இருந்தேன்
பார்த்துக் கொண்டிருந்ததாய்ப்
பலரும் கருதினர்
படித்துக் கொண்டிருந்தேன்
தலைவா உன்னை!

நீ என்றன் பள்ளிக்கூடம்
ஆண்டுகள் பலவாய்ப் படித்தும் கூட
ஆரம்பப் பாடமே முடியவில்லை
தோண்டத் தோண்டச்
சுரக்கும் ஊற்று நீ

நீ என்றன் பள்ளிக்கூடம்
இப்போது ஏன் இந்த மௌனப் பாடம்
ஏங்கும் தமிழினம் பார்த்திடு தலைவா
உன் குரல் கேட்க
குவிந்திருக்கின்றன
கோடான கோடிக் காதுகள்
எத்தனை கோடிச் சொற்கள் இருந்தென்ன
'உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே'
என்னும்
ஒற்றைத் தொடருக்கு ஈடாகுமா அவை?
பேசு தலைவா பேசு
உன் நாவை அசை - எங்கள்
கண்ணீரைத் துடை!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## திண்டுக்கல் கருத்தரங்கம்




**‘நா**டு தலைநிமிரச் சாதியைத் தொலைத்து விடு’ என்ற திண்டுக்கல் கருத்தரங்கத்திற்குத் தோழர் இரவிச்சந்திரன் தலைமையேற்க ஞானசேகர் வரவேற்புரையாற்றினர், புலேந்திரன் ஆனந்தராஜ், வெள்ளைச்சாமி, வடிவேல் தமிழ் மொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர், எழுத்தாளர் வே.மதிமாறன் பல்வேறு கருத்துகளை எடுத்துக் கூறிச் சிறப்புரையாற்றினார்.

## கண்டன ஆர்ப்பாட்டம்




**1-6-2017** அன்று திண்டுக்கல் சாதி மத வெறி எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் மத்திய அரசின் மாட்டுக் கறி தடை ஆணையைத் திரும்பப் பெற வலியுறுத்தி திண்டுக்கல் மணிக்கூண்டு அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

## நாமக்கல் மாவட்ட அமைப்பாளர்



**நா**மக்கல் மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அமைப்பாளராக தோழர் சிறீதரன் அவர்ககளை மாநிலக் கூடுதல் அமைப்புச் செயலாளர் தோழர் புலேந்திரன் நியமித்தார்.


## ஆழ்ந்த இரங்கல்

**மி**கச் சிறந்த தமிழ் உணர்வாளரும், பதிப்பக உரிமையாளரும், எழுத்தாளரும், பகுத்தறிவாளருமான வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் 01.06.2017 அன்று சென்னையில் காலமானார். அன்பே உருவமாய் வாழ்ந்தவர். கொள்கை நெஞ்சினர். அவருடைய இழப்பின் துயரத்தில் பேரவைத் தோழர்கள் அனைவரும் பங்கேற்கின்றோம்!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பா.ஜ.க சிறையில் எடப்பாடி




நன்றி: சுரேந்திரா

**ஜெ**யலலிதாவின் கார் டயரோடு டயராக விழுந்து கும்பிடு போட்டவர்களுள் இவர்களும் அடங்குவர். இவர்கள் இருவருக்கும் ஏலாப் பொருத்தம். இவர்கள் இருவரின் நோக்கம் மட்டும் ஒன்று. அது முதல்வர் நாற்காலி. தனக்கு ஆள்பலம் இல்லை என்பதை உணர்ந்த ஓ.பன்னீர்செல்வம் தன் ‘தியான’ பலத்தால் மோடியிடம் சரணம் ஆனார், முதல்வர் ஆசையில்.

கூவத்தூர் தலைகளை வைத்து முதல்வர் நாற்காலியைப் பிடித்து விட்டார் எடப்பாடி பழனிச்சாமி.

இவர்கள் இருவரும் அடிக்கடி சொன்னார்கள் ‘சூது கவ்வும்’ என்று. கவ்விக் கொண்டது பா.ஜ.க. இரண்டு பேரின் குடுமிகளும் இப்பொழுது மோடியின் கையில்.

ஓ.பி.எஸ் இப்பொழுது பதவியில் இல்லை. அறுபட்ட பல்லியின் வாலாய் துடிக்கிறார்.

எடப்பாடி தமிழகத்தின் முதல்வர்தான். ஆனால் அந்த வேலை எப்படிப்பட்டது, எப்படிச் செய்வது என்பது மட்டும் அவருக்குத் தெரியாது.

அண்மையில் மாட்டுக் கறி உண்ணத் தடைவிதித்தப்போது, செய்தியாளர்கள் அது குறித்து எடப்பாடியிடம் கேட்டனர். எடப்பாடி சொன்னார் நான் இன்னும் அந்த அறிக்கையைப் படிக்கவில்லை, படித்தபிறகு சொல்கிறேன் என்று. இரண்டு வாரங்கள் ஆகின்றன இன்னும் படித்துக்கொண்டிருக்கிறார் எடப்பாடி அந்த அறிக்கையை. இவர்தான் நம் முதல்வர்?

வேளாண்மைப் பிரச்சனை, விவசாயிகள் பிரச்சனை, வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் பாதிப்பு, ஹைட்ரோ கார்பன், நீட் தேர்வு, குடிநீர், ஏரி, குளங்கள் தூர்வார்தல் போன்ற எவ்வளவோ பிரச்சனைகள் தமிழகத்தில் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு கோடுக்க வேண்டிய ஓய்வூதியப் பணம் என்னாயிற்று? அவர்கள் ஏன் போராடுகிறார்கள்.

வணிகர்கள், உணவகங்கள், மருந்தகங்கள் என்று அனைத்து வணிக நிறுவனங்களும் அரசுக்கு எதிராகக் கடை அடைப்புப் போராட்டங்கள் என வீதிக்கு வருகின்றன.

எதைப் பற்றியும் கவலைப்படாத முதல்வர் எடப்பாடி, ‘சித்தம் போக்கு சிவன் போக்கு’ என்ற பார்ப்பனக் கருத்தியலின்படி நடந்து கொண்டிருக்கிறார்.

எதிர்கட்சித் தலைவர் தளபதியார் ஏரி குளங்களைத் தூர்வார தானே களத்தில் இறங்கினார். இதைக் கேள்விப்பட்ட எடப்பாடி நானும் தூர்வரப் போகிறேன் என்று ஓடினார் மேட்டூருக்கு. அதுவும் 8 மணி நேரத்தில் முடிக்கொண்டது.

மொத்தத்தில் முதல்வர் பதவிக்கு எந்தத் தகுதியும் இல்லா எடப்பாடி, ஓ.பி.எஸ். உடன் போட்டி போட்டுக்கொண்டு டெல்லிக்கு காவடி தூக்குவதிலே கவனமாக இருக்கிறார்.

இப்படி ஒரு முதல்வர் தேவைதானா?

இவரின் பொதுச் செயலாளர் பெங்களூர் சிறையில். துணைப் பொதுச் செயலாளர் திகார் சிறையில். இவரோ பா.ஜ.க. சிறையில்.

தண்டனை மட்டும் மக்களுக்கா!

# மத்திய அரசின் பண்பாட்டுச் சர்வாதிகாரம்

இளைய சுப்பு

*"எது எதுவோ சொல்லி ஆட்சிக்கு வந்தது*
*மதவாதம் மட்டுமே பா.ஜ.க.தந்தது"*

என்பது உண்மையாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய சட்டம், சட்டத் திருத்தம் என்று கொண்டுவந்து நாட்டைக் கூறு போட்டுக் கொண்டிருக்கிறது மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு. ஒரு வாரத்திற்கு முன் வந்துள்ளது, மிருக வதைத் தடைச் சட்டத்தில் ஒரு புதிய திருத்தம். அதன்படி, கிராமச் சந்தைகளில் மாடுகளை விற்பனை செய்வதற்கு ஏராளமான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.



விவசாய நோக்கத்திற்காக மட்டுமே மாடுகளை விற்க வேண்டுமாம். இறைச்சிக்காக விற்கக்கூடாதாம். விவசாய நோக்கில் விற்பதற்கும் கூட தாசில்தார் உள்பட ஐவரிடம் சான்றுகளை வாங்கிவர வேண்டுமாம். இதனை விட, ஏழை எளிய மக்களைப் பழி வாங்குவதற்கு வேறு வழி இருக்க முடியாது.

பால் கறக்கும் பசு மாட்டைப் பைத்தியக்காரன் கூட வெட்ட மாட்டான். ஆனால் கறவை வற்றிய வயதான மாடுகளை என்ன செய்வது? அவற்றை விற்றுத்தான் விவசாயிகள் மீண்டும் புதிய கறவை மாடுகளை வாங்குவார்கள். அவற்றை இறைச்சிக்காக விற்கக்கூடாது என்றால், அந்த மாடுகளின் எண்ணிக்கை அளவற்றுப் பெருகிவிடும். அது மட்டுமல்லாமல் அவை விவசாயிகளுக்குத் தேவையற்ற சுமையாகிவிடும்.

மாடுகள் வயது முற்றிவிடுமானால், அவற்றினால் எழக்கூட முடியாது. அதனைத் தூக்குவதற்கும் ஐந்து ஆறு ஆள்கள் தேவைப்படும். அதுமட்டுமல்லாமல், அவை படுத்தே கிடப்பதால் உடம்பெல்லாம் புண்ணாகிவிடும். இந்த புண்ணிலும், அவற்றின் இனப்பெருக்க உறுப்புகளிலும் காக்கைகள் கொத்தும். அந்தக் கொடுமைகள் அனைத்தையும் அவற்றைப் பிள்ளைகளைப் போல வளர்த்த விவசாயிகள் பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமா?

இப்போதெல்லாம் உழுவதற்கு டிராக்டர்கள் வந்துவிட்டன. காளை மாடுகள் பயன்படவில்லை நிலை இப்படி இருக்க, காளை மாடுகளை இறைச்சிக்காகவும் விற்பனை செய்யக் கூடாது என்றால், அவை பிறந்த உடனேயே கொல்லப்பட்டு விடும் என்பதுதான் உண்மை. இவைகளுக்கு எல்லாம் மாற்றாக, அந்த மாடுகளை 'கோ சாலாவில்' வைத்துப் பாதுகாக்கிறோம் என்றார்களே, என்னாயிற்று?

கோ சாலாவில் நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்துபோய் விட்டன என்று ராஜஸ்தான் உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி மகேஷ் சந் சர்மாதான், தன் தீர்ப்பில் புதிய வில்லங்கங்களை உருவாக்கிவிட்டு, ஓய்வு பெற்றுள்ளார். "இந்தியாவின் தேசிய விலங்காகப் பசுவை அறிவிக்க வேண்டும் என்றும், பசுவைக் கொலை செய்பவர்களுக்கு வாழ்நாள் தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் அவருடைய ஆன்மா (மனசாட்சி கூட இல்லை, நேரடியாக ஆன்மாவே) சொல்கிறதாம். இதனைக் கூறிவிட்டு அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். மிக விரைவில் பா.ஜ.க வில் இணைந்து விடுவதற்கும் வாய்ப்புள்ளது. இவ்வளவு மதவாத உணர்வு கொண்டவர்கள், பொறுப்பில் இருக்கும்போது எப்படிச் செயல்பட்டிருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

கிராமத்தில் மாடுகளை விற்பதற்கு இவ்வளவு நிபந்தனைகளை விதிக்கும் மத்திய அரசு, மாட்டிறைச்சி ஏற்றுமதிக்கு மட்டும் எந்தத் தடையும் விதிக்காமல் மௌனமாக இருக்கிறதே ஏன்? ●

## எழுதுவதை ஏன் நிறுத்திக் கொண்டாய்?

கவிக்கோ அப்துல் ரகுமான்



பேனா உன் ஆறாவது விரலாய் இருந்தது
கவிதையும் உன் மூளையும் கலந்தே கிடந்தன
ஒவ்வொருவரிடமும் அன்பு காட்டினாய்
ஒவ்வொரு நாளும் புதியது சொன்னாய்
கவிதையை மட்டுமா படைத்தாய்
கவிஞர்களையும் நீ படைத்தாய்!
எங்கள் கவிக்கோவே அப்துல் ரகுமானே
எழுதுவதை ஏன் நிறுத்திக் கொண்டாய்?

- சுபவீ




# கூகுள் காலண்டர்

சிவதி

**மனைவியின் பிறந்த நாளை எப்படி மறக்காமல் இருப்பது?**




அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

ஒரே ஒரு முறை மறந்துதான் பாருங்கள். பிறகு உங்களுக்கு கிடைக்கும் சிகிச்சை மூலம் வாழ்நாள் முழுவதும் மறக்காது என நகைப்புக்காகச் சொல்லுவார்கள்.

ஆனால், அவசர உலகில் எல்லா நாளின் மகத்துவமும் எப்போதும் நம் நினைவில் வைத்திருப்பது சாத்தியமில்லை என்பதே உண்மை.

1990களில் சட்டைப்பைக்குள்ளே நாட்குறிப்பு புத்தகத்தை பெரும்பாண்மையோர் வைத்திருப்பதைக் கண்டிருக்கிறேன். எந்த நாளில் என்ன வேலை, நிகழ்ச்சி நிரல், நினைவூட்டு, சந்திப்பு என அதில் குறிப்புகள் நிறைந்திருக்கும்.

இப்போதெல்லாம் அக்குறிப்பேடுகள் கால ஓட்டத்தில் காணமல் போய்விட்டன. கைக்கணினி என்றாகிவிட்ட திறன்பேசியின் வரவு காலக்கோட்டில் ஒரு மைல் கல்லை போன்று கால மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன.

நமது திறன் பேசியில் இருக்க வேண்டிய மிக முதன்மையான செயலி கூகுள் காலண்டர் Google Calender. இந்த செயலியை தரவிரக்கம் செய்து கொண்டால் உங்களின் உற்ற நண்பனாக, தனிச்செயலராக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆம். கைபேசிக்குள் இருக்கும் திறன் பொதிந்த நாட்காட்டி இது. கிழமை வாரியாகவோ, திங்கள் வாரியாகவோ எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் பார்க்க கூடிய வசதி இதில் இருக்கிறது. நாளொன்றுக்கு 24 மணி நேரம் போதவில்லை என கால்களில் சக்கரத்தை கட்டிக்கொண்டு வேகமெடுப்பவர்களுக்கு இந்த செயலி வெகுவாகப் பயனளிக்கும்.

எந்தெந்த நாளில் என்னென்ன பணிகள் இருக்கிறது என்பதையும், அதை எந்த நேரத்தில் நினைவூட்ட வேண்டும் என்பதையும் மிகச்சரியாக உங்களது தனிச்செயலர் போன்று அவ்வப்போது உங்களுக்கு உணர்த்தும்.

இதனால் உங்கள் நண்பரின் பிறந்த நாள், உங்கள் பயண நிரல் உட்பட நீங்கள் தவறவிடுவதற்கான வாய்ப்பு ஏதுமில்லை.

வண்ண, வண்ண அமைப்பில் நாம் இதனை மாற்றிக்கொள்ள முடியும் என்பது மட்டுமில்லாமல் உங்கள் மின்னஞ்சலுக்கு வரும் பயணச்சீட்டு விவரங்களை அதுவாக உங்களது நாட்காட்டியின் நிரல் குறிப்பில் எழுதி உங்களுக்கு நினைவு படுத்தும் வேலையையும் இது செய்யும். எடுத்துக்காட்டாக 10 மணிக்கு வானூர்தி எனில் உங்களுக்கு அன்று காலையே நினைவுபடுத்தும்.

மிக முக்கியமாக, ஒரு நாளில் நாம் என்ன, என்ன பணிகள் செய்ய வேண்டும் என குறித்து விட்டால், அவ்வப்போது சரியான நேரத்தில் நினைவூட்டும். அந்த நினைவூட்டலை மின்னஞ்சலாகவோ, குறுஞ்செய்தியாகவோ (SMS) ஆகவோ கூட அனுப்பக் கட்டளையிடலாம். உங்களது திறன் பேசிகளில் வேறேதும் நாட்காட்டி இருக்கமானால் அதனை ஒத்திசைவும் (Synchronize) செய்து கொள்ளும்.

நீங்கள் தரவேற்றம் செய்யும் பதிவு கணினி, டேப், திறன்பேசி என எல்லாவற்றிலும் ஒத்திசைவு ஆகிவிடும்.

உங்களது பயண நிரலை நீங்கள், உங்கள் நண்பரோடு உங்கள் அலுவலகப் பணியாளரோடு எளிதில் பகிர்ந்து கொள்ள முடியும். அதில் ஏதேனும் மாற்றம் செய்யும் அதிகாரத்தைக் கூட வழங்க முடியும்.

ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம் கருதி இடத்தாற் செயின்' என வள்ளுவர் பெருந்தகை கூறிவிட்ட பிறகு யாதொரு மேல் முறையீடும் இருக்க வாய்ப்பில்லை. காலத்தைப் போன்றதோர் உற்ற தோழனில்லை.

கூகுள் நாட்காட்டியினைப் பயன்படுத்தி கால நிர்வாகத்தைக் கடைபிடிக்கப் பழகுவோம்.

இந்தச் செயலியினைத் தரவிரக்கம் செய்ய இந்த இணைப்பைச் சுட்டவும்

https://play.google.com/store/apps/details?id=com.google.android.calendar

## கீழடி ஆய்வுக் கருத்தரங்கம்

நாள் : 22.06.2017 வியாழன் மாலை 6 மணி

இடம் : கவிக்கோ அரங்கம், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை

தலைமை : தோழர் சுப. வீரபாண்டியன்
(பொதுச்செயலாளர், தி.இ.த. பேரவை)

கருத்துரை : எழுத்தாளர் சு.வெங்கடேசன்
(பொதுச்செயலாளர், த.மு.எ.க.ச)
திரு சொ. சாந்தலிங்கம்
(தொல்லியல் ஆய்வாளர்)

தமிழினத்தின் இன்னொரு சிந்து சமவெளி நாகரிகம் கீழடி!

அனைவரும் வருக!

அன்புடன் அழைக்கும்
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.